# அறிவுச்சுரங்கம் கல்வியகம்

ARIBUCHCHURANGAM INSTITUTE VEERAMUNAI



வாழ்க்கையை வளமாக்க
வாய்ப்புக்களை வழங்கிடுவோம்.

ARIBUCHCHURANGAM INSTITUTE VEERAMUNAI-04, TEL: 0772633389

**வீரமுனை**

அறிவுச்சுரங்கம் கல்வியகம் வெளியீடு

## அறிவுச்சுரங்கம்

அஜீந்தன் ஆசானின்

# பழமொழிகளும் கருத்துக்களும்



தரம் 5

புதிய பாடத்திட்டம்

ஆசிரியர்
S.அஜீந்தன் (B.A)
077 26 333 89

**வெளியீடு 06**

**01)** அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி
- ❖ முன்மாதிரி

**02)** அழுத பிள்ளை பால் குடிக்கும்.
- ❖ முயற்சி செய்தால் பயன் கிடைக்கும்.

**03)** அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
- ❖ எதையும் அளவோடு செய்ய வேண்டும்.

**04)** அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- ❖ ஒருவரது உள்ளத்தின் சிந்தனையை முகத்தில் தெரியும்.

**05)** அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
- ❖ ஒற்றுமையே பலம், ஒற்றுமை

**06)** அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
- ❖ உத்தம நட்பு

**07)** அடாது செய்பவர் படாது படுவர்.
- ❖ அநியாயம் செய்தால் துன்பம் ஏற்படும்.

**08)** அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
- ❖ விடாமுயற்றி பலன் தரும்

**09)** அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
- ❖ பயமுள்ளவனை எல்லாம் பயமுறுத்தும்.

**வீரமுனை**

அறிவுச்சுரங்கம் கல்வியகம் வெளியீடு

**10)** ஆட மாட்டாதவள் அரங்கு பிழை என்றாளாம்.
- ❖ விடயப் புலமையின்றி குறை கூறாதே.

**11)** ஆறிலும் சாவு, நூறிலும் சாவு.
- ❖ மரணம் எந்த வேளையிலும் வரலாம்.

**12)** ஆழமறியாது காலை விடாதே.
- ❖ எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

**13)** ஆபத்துக்குப் பாவம் இல்லை.
- ❖ நெருக்கடியான நேரத்தில் செய்யும் வேலைக்கு தீங்கு இல்லை.

**14)** ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
- ❖ பிற்போட்ட காரியங்கள் நிறைவேறுவதில்லை.

**15)** ஆரியக் கூத்தாடியானாலும் காரியத்தில் கண்ணாயிரு.
- ❖ எவ்வளவு வேலையானாலும் குறித்த கருமத்தில் அவதானம் தேவை.

**16)** ஆடையில்லாதவன் அரை மனிதன்.
- ❖ ஆடை ஒருவரின் தரத்தை உயர்த்தும்.

**17)** ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரையாம்.
- ❖ அற்பனுக்கும் சில வேளை மதிப்பு ஏற்படும்.

**18)** ஆனைக்கும் அடி சறுக்கும்.
- ❖ பெரியோரும் சில வேளை பிழை விடுவதுண்டு.

**19)** ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.
- ❖ காலம் மாறி வரும்.

**20)** ஆனை செத்தாலும் ஆயிரம் பொன்.
- ❖ பயனுள்ளவர்களும் இறந்தாலும் பெருமைக்குரியவர்களே.

**21)** ஆழ அமுக்கினாலும் நாழி முகவாது.
- ❖ கொள்ளக் கூடிய அளவே கொள்ளும்.

**22)** ஆறு கடக்கிற வரையில் அண்ணன் தம்பி அப்புறம் நீ யாரோ நான் யாரோ
- ❖ தேவை நிறைவேறும் வரை உறவுகள். பின் யார் யாரோ

**23)** ஆசை வெட்கம் அறியாது.

- ❖ ஆசை மயக்கத்தைக் கொடுக்கும்.

**24)** ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகின்றது.

- ❖ முதலைக் கண்ணீர் வடித்தல்.

**25)** ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.

- ❖ கோபம் சிந்தனைக்கு இடையூறு

**26)** ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.

- ❖ காலம் மாறி வரும்.

**27)** ஆத்திரக்காரனுக்கு புத்திய மட்டு.

- ❖ கோபம் சிந்தனைக்கு இடையூறு.

இ **ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**28)** இரக்கப் போனாலும் சிறக்கப்போ.

- ❖ வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.

**29)** இக்கரை மாட்டிற்கு அக்கரைப் பச்சை.

- ❖ திருப்தியற்ற மனம்.

**30)** இட்டுக் கெட்டார் யாருமில்லை.

- ❖ தருமஞ் செய்து கெட்டவர் எவருமில்லை./தருமஞ்செய்

**31)** இரு தோணியில் கால் வைக்காதே.

- ❖ ஒரு செயலை ஒரு தடவையில் செய்ய வேண்டும்.

**32)** இளங்கன்று பயமறியாது.

- ❖ வாலிபத்துணிவு

**33)** இளங்கன்று பயமறியாது.

- ❖ வாலிபத் துணிவு

**34)** இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

- ❖ சிறு வயதில் கற்கும் கல்வி என்றும் அழியாது.

**35)** இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
- ❖ வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.

**36)** இலையும் பழுப்பும் எங்கும் உண்டு.
- ❖ எல்லோருக்கும் இன்ப துன்பங்கள் கலந்து வருவது இயற்கை.

**37)** இறைத்த கிணறே ஊறும். இறைக்காத கிணறே நாளும்.
- ❖ தர்மம் செய்தலின் சிறப்பு.

**38)** இரவற் சீலையை நம்பி இடுப்பிற் கந்தையை எறியாதே.
- ❖ பிறரை நம்பி உனது உடைமையை கைவிடாதே.

## ஈ

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**39)** ஈட்டி எட்டின மட்டும் பாயும், பணம் பாதாளம் மட்டும் பாயும்.
- ❖ பணத்தின் வலிமையால் எதனையும் சாதிக்கலாம்.

## உ

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**40)** உண்ட வீட்டுக்கு இரண்டகஞ் செய்யலாமா?
- ❖ எம்மை உபசரித்தவருக்கு துரோகம் செய்யக் கூடாது.

**41)** உன்னை திருத்து உலகம் தானாக திருந்தும்.
- ❖ முதலிலே எம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

**42)** உலை வாயை மூடலாம். ஊர் வாயை மூடலாமா?
- ❖ பலரும் அறிந்த விடயத்தை மூடி மறைக்க முடியாது.

**43)** உண்மை சொல்லிக் கெட்டவரில்லை.
- ❖ உண்மை என்றும் உயர்வைத் தரும்.

**44)** உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
- ❖ அனுபவிக்காத செல்வம் பயனற்றது.
- ❖ உலோபம் கூடாது

**45)** உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

- ❖ உதவி செய்தவரை ஒருபோதும் மறத்தல் கூடாது.
- ❖ நன்றி மறவேல்.

**46)** உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

- ❖ தகுதிக்கு மேல் ஆசைப்படக்கூடாது.

**47)** உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைவானேன்.

- ❖ தன்னிடம் இருக்க பிறரிடம் நாடல் அறிவீனம்.

**48)** உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

- ❖ அனுபவிக்காத செல்வம் பயனற்றது.

| | |
|---|---|
| **ஊ** | **ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89** |

**49)** ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

- ❖ ஊரவருடன் ஒற்றுமையாக இல்லாவிடில் அவர் பரம்பரக்கே நல்லதல்ல.

**50)** ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.

- ❖ ஒற்றுமையின்மையால் கேடு விளையும்.

**51)** ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.

- ❖ பிறருக்கு செய்யும் நன்மைகள் நமக்கு நன்மையாக அமையும்.

**52)** ஊரோடு ஒத்து வாழ்.

- ❖ எல்லோருடனும் ஒத்து வாழ வேண்டும்.

**53)** ஊருக்கு உபதேசம் உனக்கல்ல.

- ❖ சொல்லும் செயலும் வேறுபடல்.

**54)** எட்டாக் கனிக்கு கொட்டாவி விடாதே.
- ❖ கிடைக்காத ஒன்றிற்கு ஆசைப்படாதே.

**55)** எறும்பூரக் கற்குழியும்.
- ❖ தொடர்ந்து முயற்சி செய்தால் பலன் கிடைக்கும்.

**56)** எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு.
- ❖ வீண் பெருமை.

**57)** எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
- ❖ குற்றம் செய்தவன் இருக்க செய்யாதவனை தண்டித்தல் கூடாது.

**58)** எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம்.
- ❖ அக்கப்பட்டதை சுருட்டும் குணம்.

**59)** எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.
- ❖ சிறு இடமாக இருந்தாலும் சொந்த இடமாக இருக்க வேண்டும்.

## ஏ

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**60)** ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது.
- ❖ வெறும் புத்தகப் படிப்பு

**61)** ஏழையின் கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.
- ❖ ஏழ்மையின் வலிமை.

**62)** ஏழைப் பேச்சு அம்பலம் ஏறாது.
- ❖ ஏழையை யாரும் மதிப்பதில்லை.

**63)** ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
- ❖ சிறு வயதுப் பழக்க வழக்கங்களை பெரியவராகியும் திருத்த முடியாது.
- ❖ இளமையிற் செய்.

**64)** ஐந்து பணத்திற்கு குதிரையும் வேண்டும் ஆறு கடக்க பாயவும் வேண்டும்.
- ❖ பேராசை

**65)** ஐயம் இட்டு உண்.
- ❖ பிறருக்கு உதவி செய்.

ஒ ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**66)** ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
- ❖ ஒற்றுமை

**67)** ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
- ❖ ஒருவரின் குண இயல்பை அவரின் ஒரு செயலிலே அறியலாம்.

**68)** ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.
- ❖ ஒற்றுமையுடன் செயற்பட்டால் நன்மை விளையும்.

**69)** ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா?
- ❖ கூட்டு முயற்சியே தேவை.

ஓ ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**70)** ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தாற் சரி.
- ❖ எப்படியானாலும் காரியம் முடிந்தாற் சரி.

## க

ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

71) கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரமா?
- ❖ காலம் தவறக் கூடாது.

72) கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
- ❖ ஒரு சிறிய பொருளானாலும் அதன் பெறுமதி அதிகம்.

73) கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு.
- ❖ நாம் கற்க வேண்டிய விடயம் அதிகம் உண்டு.

74) கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
- ❖ நம்பிக்கை காக்கும்.

75) கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்.
- ❖ முடிந்த போதெல்லாம் படித்தால் வாழ்க்கையில் முன்னேறலாம்.

76) கழுதை அறியுமா? கற்பூர வாசனை.
- ❖ எல்லோருக்கும் எல்லாம் தெரியாது.

77) கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
- ❖ தகுதிக்கு மேல் எண்ணக்கூடாது.

78) கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
- ❖ வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.

## கா

ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

79) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
- ❖ சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது.

80) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
- ❖ எவருக்கும் தங்களது குழந்தைகள் நல்லவர்கள்.

81) காகந்திட்டி மாடு சாகாது.
- ❖ பழிக்குப் பயப்படாதே.

## கி

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**82)** கிட்டாதாயின் வெட்டென மற.

- ❖ கிடைப்பதற்கு அரிதான ஒன்றை மறப்பது நல்லது.

## கீ

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**83)** கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.

- ❖ எந்த விடயத்திற்கும் போட்டித் தன்மை வேண்டும்.

## கு

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**84)** குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது.

- ❖ நற்புகழ் மங்குவதில்லை.

**85)** குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.

- ❖ வீண் பெருமை கொள்ளல்.

**86)** குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

- ❖ தவறு செய்தால் மனச்சாட்சி உறுத்தும்.

## கே

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**87)** கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்.

- ❖ பிறர் பேச்சைக் கேட்பதால் தீமையே விளையும்.

## கோ

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**88)** கோபம் பாவத்தைத் தேடும்.

- ❖ கோபம் ஒருவனுக்கு தீமையை ஏற்படுத்தும்.

## சி

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**89)** சிறு துளி பெரு வெள்ளம்.

- ❖ சேமிப்பின் முக்கியத்துவம்.

## சூ

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**90)** சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.

- ❖ அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.

## த

**ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**91)** தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.

- ❖ பிறருக்குச் செய்யும் தீங்கு தனக்கே தீமையை உண்டாக்கும்.

## தி ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**92)** திக்கற்றவனுக்கு தெய்வமே துணை.
- ❖ யாருமற்ற மனிதனை இறைவனே காப்பாற்றுவார்.

## தொ ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**93)** தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.
- ❖ இளமையில் பழகும் பழக்கங்கள் முதுமை வரை நிலைக்கும்.

## ந ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**94)** நண்டு கொழுத்தால் பொந்தில் இருக்காது.
- ❖ வயது வந்த பிள்ளைகள் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருக்க மாட்டார்கள்.

## நா ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**95)** நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது.
- ❖ எண்ணியபடி எதுவும் நடப்பதில்லை.

## நி ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**96)** நிறைகுடம் தளம்பாது.
- ❖ அறிவு நிரம்பியவர்கள் அதிகம் பேச மாட்டார்கள்.

**97)** நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
- ❖ ஒரு சிறந்த செயலின் பயன் தீமை ஏற்படும் போது வெளிப்படும்.

**98)** நித்தம் போனால் முற்றம் சலிக்கும்.
- ❖ ஒரு வீட்டிற்கு தினமும் போவது நல்லதல்ல.

## ப ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**99)** பருவத்தே பயிர் செய்.

❖ உரிய பருவ காலத்தில் பயிர் செய்ய வேண்டும்.

**100)** பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.

❖ பணத்திற்கு ஆசைப் படாதோர் யாரும் இல்லை.

## பூ ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**101)** பூவோடு சேர்ந்து நாரும் மணக்கும்.

❖ நல்லவர்களோடு சேர்ந்து கெட்டவர்களும் திருந்தலாம்.

## பே ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**102)** பேராசை பெரு நட்டம்.

❖ எல்லை கடந்த ஆசை பெரும் துன்பத்தைத் தரும்.

## பொ ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**103)** பொறுத்தார் பூமியாழ்வார்.

❖ பொறுமையாக இருந்தால் நன்மையே கிடைக்கும்.

## போ ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89

**104)** போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

❖ மன நிறைவே ஒருவனுக்கு நிறைந்த செல்வம்.

**மி** **ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**105)** மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

- ❖ கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை அல்ல.

**மு** **ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**106)** முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.

- ❖ விடாது முயற்சி செய்தால் வெற்றி கிடைக்கும்.

**107)** முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்.

- ❖ விடாது முயற்சி செய்தால் வெற்றி கிடைக்கும்.

**வ** **ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**108)** வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.

- ❖ திறமையில் நம்பிக்கை

**வி** **ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**109)** விளையும் பயிரை முளையிலே தெரியும்.

- ❖ ஒருவனின் சிறு வயது பழக்கவழக்கத்தில் அவனைப் பற்றி மதிப்பிடலாம்.

**வீ** **ஆக்கம் –S.அஜீந்தன் (B.A) 077 26 333 89**

**110)** வீட்டிற்கு வீடு வாசற்படி

- ❖ ஒவ்வொரு வீட்டிலும் பிரச்சினை உண்டு.